**செய்தி வெளியீடு எண்: 137** **நாள்: 17.02.2020**

**செய்தி வெளியீடு**

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் 161ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(18.2.2020) காலை 9.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் பிறந்த தினமான பிப்ரவரி 18ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்கள் மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18.02.1860 அன்று பிறந்தார். கல்வி பல கற்று வழக்குரைஞராக திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், ஆங்கிலம், இந்தி, உருது, ஜெர்மன் மற்றும் ஃபிரஞ்ச் மொழிகளை அறிந்த பன்மொழி அறிஞராகவும் திகழ்ந்தார். அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தை தொடங்கியபோது வழங்குரைஞர் அங்கியை தீயிட்டு கொளுத்திவிட்டு தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறினார். 1922ஆம் ஆண்டு நடைபெற்ற “கயா” காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக கலந்துகொண்டார். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமை கட்சியின் முதல் மாநாட்டிற்கு தலைமையேற்றார். இந்நிகழ்வு தமிழகத்திற்கும், மீனவ இனத்திற்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்தது.

1923ஆம் ஆண்டு சென்னையில் இந்துஸ்தான் லேபர் கட்சியைத் தொடங்கினார். இதே ஆண்டில் தொழிலாளி – விவசாயிகள் கெஜட் என்ற பத்திரிகையை ஆரம்பித்து மக்களின் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டையும், அவர்கள் படும் துயரங்களையும் விளக்கினார். மேலும், இந்தியாவிலும் பிற இடங்களிலும் நடக்கும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களையும் செய்திகளையும் பரப்புவதற்காக 'தொழிலாளன்' என்ற ஏட்டினைத் துவக்கினார். அரசியலில் தொழிலாளர்களின் பங்கினை அந்த இதழில் வலியுறுத்தினார்.

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்கள், 1928ஆம் ஆண்டு "குடியரசு" எனும் புரட்சிகர வார ஏட்டில் சுயமரியாதை குறித்த கட்டுரைகள் எழுதினார். 1932ஆம் ஆண்டு தந்தை பெரியாருடன் சேர்ந்து "சுயமரியாதை சமதர்மக் கட்சி" யைத் தோற்றுவித்தார். இக்காலக்கட்டத்தில் தென் பகுதியில் நடைபெற்ற பல்வேறு தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்கள் தலைமை தாங்கியுள்ளார். சிந்தனையாலும், செயலாலும், அல்லும், பகலும் ஏழைத் தொழிலாளி வர்க்கத்திற்காகப் பாடுபட்ட ஓய்வறியா தொண்டர், சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலர் அவர்கள் 11.02.1946 அன்று இவ்வுலகை விட்டு மறைந்தார்.

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் 161ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(18.2.2020) காலை 9.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**